பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

25 08 2025 7.15

திங்கட்கிழமை இரவு

# ஆகாஷவாணி செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) தீவிரவாதம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளதாக இந்தியாவும் பிஜியும் அறிவித்துள்ளன.

2) வலிமை வாய்ந்த நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3) செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா முன்னிலையில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4) மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று ரிசர்வ் வங்கி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

5) காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று எட்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

-இனி விரிவான செய்திகள்-

தீவிரவாதம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளதாக இந்தியாவும் பிஜியும் கூறியுள்ளன.

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள பிஜி பிரதமர் திரு Sitiveni Rabuka பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் இன்று நடத்திய பேச்சுக்களின் போது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது என இந்த பேச்சுக்களின் போது முடிவு செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த பேச்சுக்களுக்கு பின்னர் இருநாடுகளுக்கு இடையே 9 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

>><><><><<

இந்தியா வலிமை வாய்ந்த நாடாக உருவெடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சற்றுமுன் அகமதாபாத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தீவிரவாதிகளுக்கும், தீவிரவாதத்தை ஆதரிப்பவர்களுக்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்பது ஆபரேஷன் சிந்தூர் மூலம் உலகிற்கு உணர்த்தப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

>><><><><<

ஆபரேஷன் சிந்தூரின் போது எல்லைப் பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புப் படையினருக்கு முழு ஆதரவு அளித்ததாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் பாதுகாப்பு விளையாட்டு அகாடமியை திறந்து வைத்து அவர் பேசினார்.

மக்கள் ஆதரவோடு எந்தவொரு சிக்கலான சூழ்நிலையையும் எளிதாக எதிர்கொள்ள முடியும் என்றும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

>><><><><<

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டுவதற்கு ஐஐடி கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஐஐடி குழுமத்தின் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த 25 ஆண்டுகளுக்கான தொலைநோக்கு திட்டம் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

உயர்கல்வி நிறுவனங்களின் மகுடமாக ஐஐடி-க்கள் திகழ்கின்றன என்றும், திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

>><><><<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா முன்னிலையில் உள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு சந்திரசேகர் பெம்மசானி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சி டாட் நிறுவன தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

>><><><<

நான்கு ஜி மற்றும் ஐந்து ஜி தொழில்நுட்பத்தை வடிவமைப்பதில் சி டாட் நிறுவனம் முக்கிய பங்கு வகித்ததாக அவர் கூறினார்.

குறுகிய காலத்தில் பிஎஸ்என்எல் நிறுவனங்கள் இந்த சேவையை அறிமுகப்படுத்த இது உதவியதாகவும் திரு சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்தார்.

>><><><<

மத்திய அரசின் மின்னணு வர்த்தக தளத்தின் பரிவர்த்தனை 15 லட்சம் கோடி ரூபாயை தாண்டி சாதனை படைத்துள்ளது.

2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த மின்னணு வர்த்தக தளம், விற்பனையாளர்கள் மற்றும் வாங்கு வோரின் நம்பிக்கையை பெற்றுள்ளதே இதற்கு காரணம் என்று வர்த்தகத் துறை செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

பொதுத்துறைகளுக்கான கொள்முதல் நடவடிக்கைகளில் பெரிய அளவிலான சீர்திருத்தத்தை இந்த வர்த்தக தளம் ஏற்படுத்தியுள்ளதாக திரு Mihir Kumar கூறியுள்ளார்.

>><><><><<

மகளிர் மேம்பாட்டுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதன் காரணமாக மகளிரின் பொருளாதார சூழல் மேம்பட்டுள்ளதாக தொழிலாளர் நலத்துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மகளிர் தொழில் முனைவோரை உருவாக்குவதற்காக 70 மத்திய திட்டங்களும் 400 மாநில திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முத்ரா கடன் உதவி திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களில் 68 சதவீதம் பேர் பெண்கள் என்றும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சய் மல்கோத்ரா கூறியுள்ளார்.

இன்று மும்பையில் தொடங்கிய இரண்டு நாள் வங்கி மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

சர்வதேச அளவில் பொருளாதாரம் சிக்கலான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள போதிலும் நம்நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக திரு சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்தார்.

>><><><><<

குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்வதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைந்தது.

இதனையடுத்து இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர் திரு சி பி ராதாகிருஷ்ணன் மற்றும் எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் திரு சுதர்சன ரெட்டி களத்தில் உள்ளனர்.

இத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 9 ஆம் தேதி நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் அன்றைய தினமே வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

>><><><><<

அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுடன் கடந்த 6 மாதங்களாக ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஐந்து அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இதனைத் தொடர்ந்து 17 மாநில கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எஞ்சிய கட்சிகளுடன் ஆலோசனைகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் தங்களுடைய அச்சங்களை தேர்தல் ஆணையத்திடம் நேரடியாக தெரிவிக்கும் வகையில் இந்த ஆலோசனைகள் நடத்தப்படுவதாக அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

மணிப்பூர் ஆளுநர் திரு அஜய்குமார் பல்லா கூடுதலாக நாகாலாந்து ஆளுநராக இன்று பதவியேற்றுக் கொண்டார்.

Kohima -வில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குவஹாத்தி உயர்நீதிமன்ற நீதிபதி திரு அசுதோஸ் குமார் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

முதலமைச்சர் திரு Neiphiu Rio மற்றும் அவரது அமைச்சரவை சகாக்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

நாகாலாந்து ஆளுநராக பதவி வகித்த திரு இல கணேசன் காலமானதை அடுத்து, திரு அஜய்குமார் பல்லாவுக்கு, நாகாலாந்து ஆளுநர் பதவி கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

>><><><<

மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர் திரு Jiban Krishna Saha -வை அமலாக்கத் துறையினர் இன்று கைது செய்தனர்.

ஊழல் வழக்கு தொடர்பான சட்டவிரோத பண பரிவர்த்தனை குறித்து மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் அடிப்படையில் அமலாக்கத்துறை இந்த கைது நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><<

ஹரியானாவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

Kaithal மாவட்டத்திற்கு உட்பட்ட Kyodak கிராமத்தில் பேருந்தும், வேனும் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

>><><><<

ஜம்மு கஷ்மீர், இமாச்சலப்பிரதேசம் மற்றும் பஞ்சாபில் இன்று அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

எமது செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்த வானிலை ஆய்வு மையத்தின் விஞ்ஞானி டாக்டர் ஆர் கே Jenamani குஜராத், ராஜஸ்தான், உத்ராகண்ட் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை வரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

வங்கக் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

ஒடிசா, ஆந்திரா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களுக்கு ஒரு சில பகுதிகளிலும் நாளை மறுநாள் வரை மழை பெய்யக்கூடும் என்று டாக்டர் ஆர் கே Jenamani தெரிவித்தார்.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று எட்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 56 கிலோ எடைப்பிரிவில் Dharmajyoti-யும், மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் மீராபாய் சானுவும், 44 கிலோ எடைப்பிரிவில் Preetismita Bhoi-யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் ஜூனியர் பிரிவில் Soumya-வும் மகளிர் இளையோர் பிரிவில் Payal -ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

பவானி ரெட்டிக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் Rishikanta Singh -ம் ஆடவர் ஜூனியர் மற்றும் இளையோர் பிரிவில் ஆறுமுகப் பாண்டியன் மகாராஜனும் தங்கப்பதக்கம் வென்றனர்.

-------------

ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா 5 தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஜூனியர் 25 மீட்டர் பிரிவில் Payal Khatar தங்கப்பதக்கத்தையும், Naamya Kapoor வெள்ளிப்பதக்கத்தையும், Tejaswini வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இதன் குழுப்பிரிவிலும் இந்தியாவுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

மகளிர் சீனியர் குழுப் பிரிவிலும் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.

மகளிர் Trap பிரிவில் Neeru தங்கப்பதக்கத்தையும், Aashmita Ahlawat வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இதன் குழுப்பிரிவிலும் இந்தியாவுக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

25 மீட்டர் மகளிர் பிரிவில் இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 28 தங்கம், 9 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறது.

-------------

CAFA கோப்பை கால்பந்துப் போட்டியில் பங்கேற்பதற்கான 23 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி வரும் 29 ஆம் தேதி தஜிகிஸ்தானில் தொடங்குகிறது.

>> <<

25 08 2025 7 15 நேபாள்-கலாச்சா விழா

நேபாளத்தில் 22 நாள் கலாச்சார விழா நடைபெறவுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இந்த விழா அடுத்த மாதம் 5 ஆம் தேதி தொடங்கி 27 ஆம் தேதி வரை காட்மண்டு உட்பட 5 நகரங்களில் நடைபெறும் என்று அந்நாட்டு அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இதையொட்டி, சிறப்பு கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கார்த்தி / வேணி ஏர்நெட் / 6